251

SCANNED

கிருஸ்தவக் கவியரசர்

ஹென்றி ஆல்பிரடு கிருஷ்ணபிள்ளை

வரலாறு

SCRUTINY OFFICER
2 1 FEB 1964
PUBLIC INFORMATION AND PUBLICITY DEPARTMENT
251
2 1 BH

ஆசிரியர் :
பசுமலைப் புலவர்
வீ. ப. நடராசன்

MADRAS RECORD OFFICE
MADRAS

O-,1MKPw
N64
77312

விலை 25 ந.பை.

கிருஸ்தவக் கவியரசர்
ஹென்ரி ஆல்பிரடு கிருஷ்ணபிள்ளை
வரலாறு

MADRAS RECORD OFFICE
MADRAS

ஆசிரியர் :
பசுமலைப் புலவர்
வீ. ப. நடராசன்

O-,1MKPW
N64
77312

முன்னுரை

தமிழ் நாட்டுக் கிருஸ்துவர்களிற் பெரும்பாலோர் கிருஸ்துவக் கவியரசர் H. A. கிருஷ்ணபிள்ளையவர்களின் வாழ்க்கை வரலாறு, அவர் ஆற்றியுள்ள தொண்டு முதலியவற்றை அறிந்திலர். அறிந்துகொள்ளும் வாய்ப்பு அளிக்கப் பெறவில்லை. இவரது வரலாற்றை எளிய நடையில் எழுதி, குறைந்த விலையில் சிறு நூலாக வெளியிட்டால் பலர் படிப்பர் என்னும் நோக்குக் கொண்டே இது எழுதப்பெற்றது.

தமிழ்ப் பெரும்புலவர்களின் திருநாட்கள் கொண்டாடப்பெறும் இந்நாளில் நம் கவியரசரின் திருநாளையும் கிருஸ்துவ சமூகம் கொண்டாட வேண்டும் என்ற உணர்ச்சியைத் தூண்டுவதுபோல, கவியரசரின் 64ஆம் ஆண்டு நினைவு நாளாகிய இன்று இதை வெளியிடத் துணிந்தேன்.

மிகக் குறுகிய காலத்தில் கொடுத்த இப்பணியைத் தம் கிருஸ்தவப் பணியென ஏற்றுச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய பசுமலை லெனக்ஸ் அச்சகத்தார்க்கு நன்றி உரித்தாகுக.

கிருஸ்துவ குருமார், ஆசிரியர்கள், மாணவர், பெரியோர் ஆகியோர் இந்நூலைப் படித்தும் பிறர்க்கு வாங்கிக் கொடுத்தும் ஊக்குமாறு வேண்டுகிறேன்.

இயேசு நாமம் பரப்புவோம் வாரீர்.

ஞானம் நிலையம்
பசுமலை, மதுரை 4
3—2—1964

வீ. ப. நடராசன்
பசுமலைப் புலவர்.

கிருஸ்தவக் கவியரசர்

ஹென்ரீ ஆல்பிரடு கிருஷ்ணபிள்ளை

தோற்றம் : 23 ஏப்பிரல் 1827

மறைவு : 3 பெப்ருவரி 1900

கிருஸ்தவக்கவி அரசர்

(ஹென்றி ஆல்பிரடு கிருஷ்ணபிள்ளையவர்கள் வரலாறு)

எருசலேம் பட்டினத்தைவிட்டு, தொலைவிலுள்ள தமஸ்குப் பட்டினம் நோக்கி ஒரு கூட்டம் விரைந்து செல்கின்றது. கூட்டத்தாரோ கொலைக் கருவிகளைக் கையிலேந்திச் செல்கின்றனர். குத்துவோம் வெட்டுவோம், கொல்லுவோம் என்றபடி முழக்கமிடுகின்ற ஒலி. இவர்களுக்குத் தலைமை தாங்கி வழி நடத்திச் செல்கின்றான் தர்சுப் பட்டினத்துச் சவுல் என்ற வீரன். கிருஸ்து பெருமானின் நாமத்தை யேற்று, கிருஸ்துவின் அடியராக எவ்வெவர் வாழ்கின்றனரோ அவர்களை ஒழித்துக் கட்டுவதே இத்தலைவன் கொண்ட உறுதி. இதுவரை பல இடங்களில் அத்தகு செயல்களைச் செய்து பலரை ஒழித்ததில் மகிழ்ச்சி. தமஸ்குப் பட்டினத்தில் கிருஸ்துவின் அடியவர்கள் கணக்கற்றோர் கூடிவிட்டதை யறிந்தே இத்தலைவன் அங்குச் செல்கின்றான். இத்தகைய வீரனுக்கு எதிர்பாராத இன்னல். பெரும் இடி முழக்கம்; பெரும் ஒளி திடீரென ஏற்பட்டது. பார்தத தலைவனின் கண்கள் குருடாயின. கீழே விழுந்தான், அலறினான், துடித்தான். காரணம் அறிய முயன்றான்; அப்போது கருணை வள்ளலாம் இயேசு பெருமானின் சொறகள் அவன் காதில் ஒலிக்கின்றன. ‘‘நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே’’ என்பதே அவ்வொலி. சவுல் தன் பெருங் குற்றத்தை உணர்ந்தான். நொந்தான், அழுதான், மன்னிப்பு வேண்டினான். மன்னிப்பும் கிட்டியது. கடமையை உணர்ந்தான். காலமெல்லாம் இயேசுபெருமான் தொண்டனாக வாழ உறுதிகொண்டான். அவரையே சுமந்து திரிந்தான். கொலைத் தொழிலை விடுத்து நிலையான பேரின்ப வாழ்வை ஏற்றான். தீய நிலையினின்று தூய நிலைக்கு

மாறினன். வம்புச் செயல்கள் அழிந்து அன்புச் செயல்கள் வளர்ந்தன. சவுல் பவுலாக ஆயினன்.

இவ்வரலாறு சத்திய வேதத்திலே, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் நடைபெற்ற வரலாருகக் காண்கிறோம். இதுபோலவே பத்தொன்பதாம் நூற்ருண்டிலே பாளையங்கோட்டை யென்னும் பாண்டிய நாட்டுப் பதியிலே நடைபெற்றதொரு நிகழ்ச்சி அதுவே நம் மகா வித்துவான் H. A. கிருஷ்ணபிள்ளையவர்கள் வரலாருகும். தமிழ் நாட்டில் வாழுகின்ற கிருஸ்தவர்களாகிய நம்மில் பலருக்கு அவருடைய உண்மை வரலாறு தெரியாது. அறியும் வாய்ப்புக்கள் அளிக்கப்படவில்லை. அதுவும் அவருடைய வாழ்வும் பவுலின் வாழ்வினை ஒத்தது என்பது மிகக் குறைந்த பேரே அறிந்தது. ஆகவே அவருடைய வாழ்வை வெளியிட்டு பலருக்குப் புத்துணர்ச்சியூட்ட முன் வருகிறோம். பத்தொன்பதாம் நூற்ருண்டுப் ப்வுலின் வாழ்வு இது.

பாளையங்கோட்டைக்குப் பக்கத்தில் ஏறத்தாழ ஐந்து கல் தொலைவில் ரெட்டியாபட்டி யென்னுமொரு ஊர். ஆங்கு சங்கரநாராயணபிள்ளை யென்பவர் ஒருவர். வைணவ வேளாள குலத்தைச் சார்ந்தவர். நல்ல தமிழாராய்ச்சி மிக்கவர். திருமாலைத் தொழுபவர். ஆகையால் வைணவ நூல்களை நன்கு ஆய்ந்தார். கம்ப ராமாயணம், திருவாய் மொழி, திவ்விய பிரபந்தம் போன்ற நூல்களைப் பயின்று தேர்ந்தவர். இவ்வாறு தெய்வப்பற்றுக் கொண்டொழுகி வந்தார். ஆனல் நீண்ட காலமாகக் குழந்தைப் பேறு கிட்டவில்லை. தனக்கு முப்பத்திரண்டு ஆண்டுகளாகியும் குழந்தையொன்றும் இல்லாமை கண்டு, தெய்வத் திடமே இக் குறைபோக்க வேண்டிவந்தார். இறைவனருள் கிட்டியது. 1827 எப்பிரல் 23-ல் ஓர் ஆண் மகவு பிறந்தது; அவரே தன் தந்தையார் பெயரால் 'கிருஷ்ணன்' என நாமம் சூட்டப்பெற்ருர். கிருஷ்ணன் பிறந்த ஏழு ஆண்டுகட்குப்

பின்னர் மீண்டுமொரு ஆண் மகவு பிறந்து அவருக்கு 'ஜந்தையா' எனப் பெயரிடப் பெற்று இருவரும வளர்ந்தனர். முதல் மகனான கிருஷ்ணன் கல்வியிலும், அறிவிலும், விளையாட்டிலும், உடற்பயிற்சியிலும் முதன்மை யாகவே விளங்கினர் தமிழறிவு வாய்ந்த தந்தையால் வளர்க்கப் பெற்றமையால் ஆண்டு பதினைந்து முடிவதற்குள் வைணவ நூல்கள் யாவற்றையும தந்தையாரிடமே கற்று அவற்றில் பலவற்றை மனனம் செய்தார். எனினும் இலககண அறிவு பெறவேண்டுமென விரும்பி மாணிக்க வாசகத் தேவர் என்னும் பண்டிதரிடம் இலக்கணம் பயிலு மாறு தந்தையார் ஒழுங்கு செய்தார். அத்துடன் வட மொழிப் புலமையும் வேண்டுமெனக் கருதி, ஓர் அந்தணரிடம் வட மொழியும் பயின்றார்.

தந்தையாரான சங்கரநாராயணபிள்ளை நோயுற்றார். தாம் பிழைப்பது கடினமென்றுணர்ந்த அவர், தம் முதல் மகன் கிருஷ்ணனுக்குப் பதினைந்து வயதாகிய அவ்விளமைப் பருவத்திலேயே திருமணம் நடத்தினர் இந்த நல்ல காரியம் முடிந்தபின் திடீரென இறைவனடி சேர்ந்தார். தந்தையார் பிரிவால் தாங்கொணாத துக்கம் கொண்ட கிருஷ்ணன் குடுமபப் பொறுப்பு முழுவதையும ஏற்றார். எனினும் மூன்று ஆண்டுகட்குப் பின தனது பதினெட்டாம் வயதில் மீண்டும படிக்கத் தொடங்கி மகா வித்துவான் திருப்பாற கடல்நாதக் கவிராயரிடம நன்னூல், யாப்பு போன்ற இலககணமும், இதர பல இலக்கியங்களும் கற்று அவற்றில் தேர்சசியடைந்தார். இவ்வாறு பயிலுங்கால் தம்முடன் மாணவர் ஒருவர் நெருங்கிய நண்பராயினர். அவரே சண்முகநாதக கவிராயர் ஆவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் பாளையங்கோட்டையில் கிருஸ்தவப் பணி மிக ஊக்கமாக நடைபெற்றது. மேல் நாட்டினின்று போந்த மிஷனெரித் தந்தையர்கள் ஆற்றிய தொண்டுகள் அளவிட முடியா.

கல்விக் கூடங்கள் பல வைத்து மக்களின் கண்களைத் திறக்கச் செய்தனர். அறிவொளி வீசுமாறு அல்லும் பகலும் உழைத்தனர். எதிர்ப்புக்களோ எழுதிக் காட்ட இயலாதது எனினும் இயேசு பெருமான் திருநாமத்தைப் பரப்பி அவர் சிலுவை அன்பைப் பலர் உணரப் பகர்ந்தனர்.

தமிழறிவு பெற்ற சிலர், புராண இதிகாசங்களைக் கற்ற பலர் ஆகியோருடைய உள்ளங்கள் ஆராய்ச்சியில் இறங்கின. உண்மையான நெறியெதுவென உணரத் தொடங்கினர் 'கிருஸ்து பெருமானே உலகத்தின் ஒப்பற்ற மீட்பர்' எனக்கண்டனர். கிறிஸ்துவின் அடியராக ஆயினர். தாம் மட்டுமில்லாமல், குடும்பம் குடும்பமாகச் சேர்ந்தனர்.

தென்காசித் தாலுகாவில் பாவூருக்குப் பக்கத்தில் திப்பணம்பட்டி ஒரு சிற்றூர். அவ்வூர் அலுவல்களைத் தும் கிருஷ்ணனின் தந்தையார் மேற்பார்வையில் நடைபெற்று வந்தது. தந்தையார் காலமானபடியால் இப்போது கிருஷ்ணனுடைய பொறுப்பில் அவ்வூர்க் கருமங்கள் நடைபெற்றன. அச்சிற்றூரின் முதல்வரே நம் கிருஷ்ணன். தென்காசித் தாலுகாவில் நல்லூர் என்பது மற்றொரு சிற்றூர். அந்த நல்லூரிலிருந்து பலர் கூட்டமாக கிருஸ்து மதத்தில் இறங்கினர். இவ்வாறு இந்து மதத்தினின்று கிருஸ்தவ மதத்திற்கு மாறிய செயலைக் கிருஷ்ணன் அறிந்தார். வைணவ நூல்களை நன்கு கற்றவர். பதினெட்டு வயதுடையவர். இளமை உள்ளம் படைத்தவர். இம்மத மாறுதலைக் கண்டு சீற்றம் கொண்டார். தான் பணியாற்றும் தாலுகாவில் மத மாற்றமா என வெகுண்டார். வெறுப்புணர்ச்சி மேலோங்கியது. கிருஸ்தவர்களாகச் சேர்ந்தவர்களைச் செவ்வனே உதைத்துத் திருப்பவேண்டுமென முடிவு செய்தார். இலக்கண, இலக்கியங்கள் கற்றறிந்துங்கூட பிறரைத் தாக்குதல் தீயது என எண்ணினாரில்லை. கிருஸ்தவர்கட்குத் தாம் கொடுக்கும்

அடி, உதை முதலிய துன்பங்களைக் கண்டு கிருஸ்தவ மிஷனெரிகளும், குருமார்களும் ஓட வேண்டுமென்று விரும்பினர். எனவே துணிந்து செயலில் இறங்கினர். உடற்கட்டு அமைந்த வேளாளர்கள், மறவர்கள் ஆகியோரைத் திரட்டினர். படை சேர்த்தார். தாமே தலைமை தாங்கினர். நல்லூர் சென்றார். புதிதாகக் கிருஸ்துவை ஏற்றுக் கொண்டோரைத் தேடிப் பிடித்தார். பெருங் கலகம் செய்தார். அடி, உதை கொடுத்து நொறுக்கினர்.

கிருஸ்து பெருமானை ஏற்ற காரணத்திற்காக நல்லூரிலே பலர், கிருஷ்ணன் தூண்டுதலால் அடி, உதை, மிதிபட்டதோடும் தம பொருட்கள் பலவற்றையும் இழந்தனர். பட்ட இன்னல்களைக் குருமாரிடம் சொல்லி அழுதனர். குருமாரோ அடிபட்டும் பொருள் இழந்த கிருஸ்தவர்களுக்கு ஆறுதலும் தேறுதலும் சொல்லியதோடு அரசாங்க அதிகாரிகட்கும், மாவட்டக் கலெக்டருக்கும் தகவல் கொடுத்தனர். பதினெட்டு வயது நிரம்பிய கிருஷ்ணனே பலரை அடக்கி விட்டோம் என்று பெருமிதமாய் இருந்தார்.

மாவட்டக் கலெக்டரின் ஆணை பிறந்தது, கொள்ளையடித்தல், கொலைசெய்ய முற்படல் என்ற குற்றச்சாட்டுகள் காட்டி அச்செயலில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்யுமாறு பிறந்ததே அவ்வாணை. இச் செய்தி தெரிந்தவுடன் இளங்காளையான கிருஷ்ணன் இரவோடிரவாய் திருநெல்வேலித் தாலுகாவில் தொலைவிலுள்ள சிற்றூர் ஒன்றுக்குப் பறந்தார். ஆனால் கிருஷ்ணனுடைய மாமன்மார், சுற்றத்தாரில் சிலர், கொள்ளையடித்த பலர் கைதி செய்யப்பட்டுத் தண்டனையடைந்தனர். கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் உப்பு மூடைகள் பல இருந்தன. அவைகள் அரசாங்கத்தார் கண்களில் படாமல் இருக்கவேண்டுமென்று நல்லூரிலே கிருஷ்ணன் குடியிருந்த வீட்டில் இருந்த கிணறு

ஒன்றிலே கொட்டிவிட்டனர். நல்ல தண்ணீராக இருந்த அக்கிணறு உவர் நீராக மாறி இன்றவரை அந்நிலையிலேயே யுள்ளது.

மறைந்து திரிந்த கிருஷ்ணன் மாதங்கள் பலசென்ற பின் சண்முகநாதக் கவிராயர் தொடர்பு கொண்டார். தமிழ் ஆராய்ச்சியில் மென்மேலும் ஊக்கங்காட்டினர். இலக்கணத்தை மிக அதிகம் பயின்று இணை சொல்ல இயலாத அறிவு பெற்றார். சண்முகநாதக் கவிராயர் மூலமாக, ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்தில் கிருஸ்தவ குருவாக விளங்கிய மறைத்திரு W. T. சத்தியநாதபோதகர் பழக்கம் கிட்டியது. ஆயினும் அவரிடம் தமிழ் மொழித் தொடர்பான காரியங்களைப் பேசுவாரேயன்றி மத சம்பந்தமான பேச்சுக்களே பேசியது இல்லை. குருவானவருக்கும் தமிழில் நல்ல அறிவு உண்டு. கிருஷ்ணனுடைய கிருஸ்தவ வெறுப்புணர்ச்சியே மத சம்பந்தமான உரையாடல்கள் அவர்களிடை நடைபெறுமைக்குக் காரணம். எனினும் குருவோ அவரிடம் அன்பு காட்டியே வந்தார்.

முன்னரே நாம் அறிந்தவாறு நெல்லைப்பகுதியில் கிருஸ்தவப் பணி மிகுதியாக நடைபெற்று வந்தது. சாயர்புரம் மிஷன் பகுதியிலே ஒரு கல்விச்சாலை. அங்கு ஒரு தமிழாசிரியர் தேவை. அப் பகுதியைக் கண்காணித்து வந்தவரோ அருள் பெருந்திரு கால்டுவெல் பிஷப் அவர்கள். தமிழை நன்கு கற்றவர். தமிழ் மொழியைப் பிறமொழிகளோடு ஒப்பிட்டு, இம்மொழியே தொன்மை மொழி, தூய மொழி, இனிய மொழியெனத் தம் 'மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலில் எழுதி உலகுக்குத் தமிழ் மொழியின் சிறப்பைக் காட்டியவர். பிஷப் அவர்களுக்கு அம்மாவட்டத்தில் வாழ்ந்த தமிழறிஞர்கள் அனைவரையும் தெரியும். ஆகவே வித்துவான் திருப்பாற்கடல்நாதர், மேதகு சத்தியநாதபோதகர் ஆகியோருக்கும் தமிழாசிரியர் ஒருவரைத்

தம்மிடம் அனுப்புமாறு வேண்டி எழுதியிருந்தார். பிஷப் அவர்கள் வேண்டுகோளின்படியே மூன்று பெரியார்கள் தமிழாசிரியர்களை அனுப்பியிருந்தனர். அவர்கள் மூவருள் நம கிருஷ்ணனும ஒருவர்.

கிருஷ்ணனுக்குக் கிருஸ்தவ மதமோ மிஷனெரிகளோ கிஞ்சித்தும் பிடிக்கவில்லை. எனினும் தான் பழகி, நட்புக் கொண்ட சத்தியநாதபோதகரவர்களின் கட்டாயத்தின் பேரில் அவ்வேலைக்கு மனுச்செய்யத் துணிந்தார். மூவருக்கும் இலக்கண, இலக்கியத் தேர்வு ஒன்று வைக்கப் பெற்றது. அத்தேர்வில் கிருஷ்ணனே முதன்மையாகத் தேறினர். அழகிய சிவந்த மேனி; அதற்கேற்றாற்போல் எடுப்பான உயரம்; அகன்ற நெற்றி; அமைதி நிறந்த கண்கள்; இத்தகைய உருவ அமைப்பையும், இலக்கண இலக்கிய அறிவையும், சத்தியநாத போதகரின் கடிதத்தையும் நன்கு ஆழ்ந்தறிந்த பிஷப் கால்டுவெல்டு ஐயரவர்கள் கிருஷ்ணனையே தெரிந்தெடுத்தார். தனது 25-ஆம் வயதிலே 1852-ம் ஆண்டில் தமிழாசிரியப்பணியை ஏற்றார்.

கிறிஸ்துபெருமான் வாழ்வையோ, அவருடைய அறவுரைகளையோ, தெய்வ அவதாரத்துக்கேற்ற திருச்செயல்களையோ சிறிதும கிருஷ்ண பிள்ளையான தமிழ் ஆசிரியர் அறிந்தவரல்லர். சில ஆண்டுகளுக்கு முன் அவர்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்னும் எண்ணத்திலே உழன்ற இவ்வாலிபர் இன்று கிருஸ்தவர்கள் மத்தியிலே கிருஸ்தவப் பள்ளியிலே, கிருஸ்தவ மிஷனெரிகளின் கண்காணிப்பிலே பணியாற்றும் நிலை வந்ததே என மட்டும் எண்ணினர். தம வேலையில் கண்ணும் கருத்துமாயிருந்தார். அவருடன் பழகிய ஆசிரியர்கள், குருமார், அருள் திரு கால்டுவெல் பிஷப் அவர்கள் ஆகியோர் காட்டிய அன்பு, அருள் நிறைந்த சொற்கள், நடக்கையில் காட்டிய ஒழுக்கம், இயேசு பெருமானை வணங்கும் முறை ஆகிய அனைத்தும் தமிழாசிரி

யர் கிருஷ்ண பிள்ளையவர்களை வியக்கச் செய்தது. எல்லாம் வல்ல இயேசு பெருமான் சாயர்புரம் மிஷன் கல்விக்கூடத்தின் மூலம் இவ் வாலிபத் தமிழறிஞரை ஆட்கொள்ளச் சித்தங்கொண்டு அவருள்ளத்தில் அன்பு விதை விதைத்தார். பல நாட்கள பலரிடம் பழகிய பின் சத்திய வேதப் புத்தகம் ஒன்றைத் தான் வாசிக்குமாறு பெற்ருர்.

சாயர்புரம் பள்ளியிலே நண்பர் ஒருவரிடம் தான் பெற்ற சத்திய வேதப்புத்தகத்தை, கிருஷ்ணபிள்ளையவர்கள் வாசிக்கத் தொடங்கினர். உலகப்படைப்பு, பாவம் உண்டாகியவிதம், வெள்ளப்பெருக்கு, ஊழிக்காலம் ஆகியவற்றின் வரலாறுகள் தெளிவாகக் காட்டப்பெற்றிருத்தலைக் கண்டார். தான் இதுவரை படித்தும் நம்பியும் வந்த இவற்றை வரலாறுகளோடு ஒப்பிட்டுப்பார்த்தார். இவைகளே உண்மைக்கூற்று எனத் தன் உள்ளமே உணர்த்தியது. ஆகவே மேலும பல அதிகாரங்களை வாசித்தார். படிக்கப்படிக்கப் பல உண்மைகள் தெரிந்தன. ஆகவே இவரை ஆட்கொள்ள இயேசுபெருமான் சித்தங்கொண்டார்.

பழுத்த வைணவக் குடும்பத்தில் பிறந்து, அதற்குரிய சடங்குகள் அனைத்தையும் கைக்கொண்டு ஒழுகி வந்தவர் நம் வித்துவான். சங்கு சக்கரம் ஆகிய இரண்டு வைணவச் சின்னங்களையும் பழுக்கக் காய்ச்சிய உலோகத்தால், தன் இருதோள்களிலும் சூடுபோட்டுத் தழும்பேறிய உடலினர். பிறமதங்களைப் பெரிதும் வெறுத்தவர். ஆனல் இன்று அவர் உள்ளம், முன்பு கைக்கொண்டவைகளை யெல்லாம உதறித்தள்ளியது. வேதப்புத்தகம் காட்டிய உண்மைகளை எந்த நேரமும் எண்ணத் தொடங்கியது. எனினும் திடீரென அவ்வாறு தன்னை வெளிக்குக்காட்ட அச்சம். இப் புதிய கருத்துக்களைத் தள்ளி விடவும் மனமில்லை. சுற்றத்தார் மனைவி மக்கள், உற்ற நண்பர்கள், ஊர்ப்பெரியோர், ஆகியோர் தம்மை என்ன சொல்வார்களோ என்ற ஏக்கம்.

இவ்வாருக உள்ளம் இருதலைக்கொள்ளி எறும்பு எனப் போராடியது. ஆயினும் வேதப்புத்தக வாசிப்பைக் கைவிட்டாரில்லை.

உள்ளம் உண்மையைக் கண்டும், உடனே வன் வெளியுலகுக்கு அதைக்காட்டவில்லையென்ருல் கிருஸ்து மார்க்கத்தில் சேருவது மிக இழிவாக அன்று கருதப்பெற்றது. கிருஸ்து மதம் ஏதோ தனியாக ஒரு சில குலத்தாருக்கு வந்தது என்று உயர்ந்தோர் எனத்தமமை எண்ணிக்கொண்டிருந்தவர் கருதினர். இம்மதத்தில் சேர்ந்தோரை வெறுத்தொதுக்கினர். துன்பங்கள் பல மறைமுகமாகவும நேர்முகமாகவும் செய்தனர். ஒரு காலத்தில் தானே நல்லூரில் கிறிஸ்தவர்களுக்குத் துன்பஞ் செய்தவர் இவர். இன்றைக்குங்கூட இவ்வளவு எழுச்சியும் உணர்ச்சியும் மிக்க காலத்திலே கிருஸ்தவர்களை வெறுப்பவர்களும், மறைமுகமாகவோ நேர்முகமாகவோ துன்பஞ் செய்பவர்களும் இருக்கின்றரெனின் ஒரு நூறு ஆண்டுகளுக்குமுன் அவ்வாறிருந்ததில் வியப்பில்லை. ஆகையால் வித்துவானவர்கள் அறிஞரானபடியால் அன்று வெளி உலகைக்கண்டு அஞ்சினர்.

இந்த நேரத்திலே வித்துவானவர்களை ஒரு நிகழ்ச்சி கவர்ந்தது. தமக்கு உற்ற நண்பராகவும், உடன்படித்த மாணவராகவும் பாளையங்கோட்டையில் தமிழ்ப்பண்டிதராக இருந்த வித்துவான் சண்முகநாதக் கவிராயர் இயேசு பெருமான் திருச்சபையில் சேர்ந்தார். நல்ல தமிழ்ப் புலமையும், ஆழ்ந்த சமயக்கல்வியும், இலக்கிய நுண்ணறிவும் கொண்ட அத்தமிழ்ப்பண்டிதர் இவ்வாறு கிருஸ்துமதத்தைத் தழுவிய செயல் இவரையும் அசைத்தது. எனினும் இவர் வெளிப்படையாகக் கிறிஸ்தவராக ஆவதற்கு மனந்துணியவில்லை.

மற்றுமொரு நிகழ்ச்சி. இவர் உடன்பிறந்த தம்பி முத்தையாபிள்ளை என்பவர் பாளையங்கோட்டைக் கல்லூரியில்

தமிழ்ப்பண்டிதராயிருந்தார். இங்கு தமிழ் ஆசிரியராவதற்கு முன்பு மெய்ஞ்ஞானபுரத்தில் இருந்த பள்ளியில் தமிழாசிரிய ராக இருந்தவர். அவரும் கிருஸ்து பெருமானை ஏற்ருர். இதைக்கேட்டவுடன் கிருஷ்ணபிள்ளை அடைந்த மனநிலை சொல்லத்தக்கதல்ல. இவ்விருவரையும பெற்ற தாயார் அளவிலாத்துயரங்கொண்டார். நல்ல வைணவக் குடும்ப மாகிய தம குடும்பத்திலா இத்தகு மதமாற்றம் எனத் தாயா ரும், மூதத மகனுன கிருஷ்ணபிள்ளையும் எண்ணித் துயருற் றனர். கிருஷ்ணபிளளையின நிலேயோ புயலில் சிக்கி, கடலில் தததளித்துக் கரைசேர இயலாமல் இருக்கும் கப்பலை ஒத்தி ருந்தது இயேசுகிருஸ்து பெருமானின் அன்பும், வாழ்வும், அறிவுரைகளும் அவர் உள்ளத்தில் வேரூன்றித் தளிர்த்தன. வெளிப்படையான சடங்குகளோ அவரை வைணவனெனக் காட்டியது. இந்த உள்ளக்கொதிப்பிலே ஐந்தாண்டுகள் சென்றன.

பாளையங்கோட்டையிலே தனக்கோடி ராஜு என்ற ஒருபெரியார். ஆங்கிலமும் தமிழும் நன்கறிந்தவர். கல்லூரி வாழ்விலேயே கிருஸ்தவராக மாறியவர். அவர் நினைவு வித் துவான் கிருஷ்ணபிள்ளையவர்கட்கு வந்தது. பாளையங் கோட்டை சென்ருர். பலமணி நேரம் அவருடன் உரை யாடினர். ஐயங்களையெல்லாம் கேட்டார். பதில் கிடைத்தது. இறுதியில் தனக்கோடி ராஜு என்பவர் வித்துவானவர் களுக்கு நான்கு புத்தகங்கள் கொடுத்து அவற்றை வாசித் துப் பார்க்குமாறு வேண்டியனுப்பினர். இளமைப் பக்தி ஆத்துமக்கவலை தீர்த்தல், இருதயக்காவல், மோட்ச பிரயாணம் என்பவைகளே அப்புத்தகங்கள். இவற்றில் மோட்ச பிரயா ணமே வித்துவானவர்களைப் பெரிதும் கவர்ந்து பின்னளில் பெருநூல் செய்வதற்குத துணை புரிந்தது.

பாளையங்கோட்டை செல்லும்போதெல்லாம் இவர் தம்பி முத்தையாபிள்ளையையும் கண்டு, ஐயங்களைச் சொல்லி

அவற்றிற்கு விடை காண்பார். சிறந்த வைணவ நூல்களைத் தெளிவாகக் கற்றுணர்ந்த மேதையானபடியால், இவருக்கு ஏராளமான ஐயங்கள் எழுந்ததில் வியப்பில்லை.

தமிழ் இலக்கண, இலக்கியங்கள் செவ்வனே கற்று, சிறப்பாக வைணவ நூல்களைத் தெளிவுபடத் தேர்ந்து, வாழ்ந்த கிருஷ்ண பிள்ளையின் உள்ளத்திலே ஐயங்கள் அநேகம் தோன்றின. பலநூல்கள் வாயிலாகவும், குருமார்கள் மூலமும் அவ்வப்போது அவைகளுக்கு விடை கண்டுவந்தார். ஆயினும் முழுவதுமாக ஐயம் தீர்ந்தபாடில்லை. ஆகவே இயேசுகிருஸ்து பெருமானைப்பற்றிய வரலாறு, அவர் அறிவுரைகள், வியப்புச் செயல்கள் போன்றவையோடு இந்துமத சித்தாந்தங்களை ஒப்பிடலானார். ஒவ்வொன்றிலும் தன் உள்ளத்தில் இயேசுபெருமானின் சிறப்பை உணர்ந்தே வந்தார். பள்ளி வேலை நீங்கலான பகல் வேளைகளிலும் இரவு நேரங்களிலும் ஓயாத உள்ளப் போராட்டம். தன்னைச் சுற்றி வாழும் மனைவி, மக்கள், உற்றார், உறவினர், இனத்தார் ஆகியோர், தான் கிருஸ்து பெருமானை ஏற்றுக்கொண்டால் என்ன நினைப்பரோ, என்ன செய்வரோ என்ற எண்ணம் அவரைப் பெரிதும் அலைக்கழித்தது.

இவ்வாறிருக்கும் நாளையில் ஒரு நாள் பாளையங்கோட்டை சென்றிருந்தார். அன்றிரவு திருவாளர் தனக்கோடிராஜு அவர்களிடம் மீண்டும் சென்றார். நீண்ட நேரம் அவரிடம் வினாக்கள் பல கேட்டார். தக்க விடைகள் கிட்டின. அன்றே தம்மைக் கிருஸ்துவுக்கு அடிமையாக ஒப்படைத்தார். அவரில்லத்திலேயே படுத்திருந்த அவர் தனியாக முழங்காலூன்றி ஜெபம் செய்தார். ''அன்றே கிருஸ்து பெருமானை யறிந்தேன். அவர் திருநாமத்தினாலே ஜெபம் செய்தேன்'' எனக் கவியரசர் கிருஷ்ண பிள்ளையவர்களே எழுதியுள்ளார். மேலும்,

கவியானபடியால் தம் உள்ளத்தினின்றும் அன்புப் பெருக்கு ஊற்றெடுத்து ஓடியதை, ஒரு கவியாக எழுதி வைத்தார். அது பின்வருமாறு,

"கருணையங் கடலே அந்தகாரமாம் வினையைப்
போக்கும்
அருணனே அடியேற்காக ஆருயிர் விடுத்த தேவே
பொருள்நயம் தெரியாத்தீய புல்லியன் எனை
யாட்கொள்ளத்
தருணம் என்னிதயம் நிற்க சமர்ப்பணம்
கருமமூர்த்தி."

"கருணைக்கடலே! அந்தகாரமாகிய இருளைப்போக்கும் சூரியனே! அடியவர்களாகிய எம்பொருட்டு அருமையான உயிர்விடுத்த தேவனே! இத்தனை நாட்களாய் உண்மைப் பொருள் தெரியாது வாழ்ந்த அற்பனாகிய என்னை ஆட்கொள்ள இதுவே தருணம். என் உள்ளத்திலே எழுந்தருள்வாயாக. தருமமூர்த்தியே என்னை இதோ தத்தம் செய்கிறேன்" இதுவே இப்பாடலின் கருத்து.

அன்று முதல் தமது வெளி அலங்காரங்களாகிய வைணவ சின்னங்களை அறவே நீக்கினார். தன் வீட்டில் முழங்காலில் நின்று ஆண்டவரைத் துதித்தார். பலரோடும் மதம்பற்றித் தர்க்கம பண்ணினார். உண்மைப் பொருள் இயேசுகிருஸ்துவே என உலகறியச் சொல்ல ஆரம்பித்தார். பலர் இம்மாற்றம கண்டு வியந்தனர். மனைவியாரும், தாயாரும மலைத்தனர். செய்வதின்னதெனத் தெரியாது திகைத்தனர். வந்ததே மகனுக்கு மோசம் எனத் தாயார் மருண்டார். இக்காலையில் அவருக்கு மூன்று பெண் குழந்தைகள் இருந்தனர். மனைவியார் இம்மக்களைக் காட்டி அவரை மயக்க முயன்றார். "தகப்பனையாவது, தாயையாவது, மகனையாவது, மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன்

சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்று" என்ற சத்திய வேதவாக்கியங்களை நன்கு படித்தறிந்தவர் எனவே அனைத்தையும் உதறித்தள்ளி ஆண்டவரைப் பின் பற்றத் துணிந்தார்.

தான் தங்கியிருந்த சாயர்புரத்தில் கிருஸ்துவை ஏற்றுக் கொண்டால் பலவகையில் துன்பம் நேரிடும் என்பதை யறிந்தார். எனினும துன்பத்தை ஏற்கத் துணிந்தார். அந்நேரம் அதையறிந்த இவரின் தம்பி முத்தையா பிள்ளையும் அறிஞர் தனக்கோடிராஜு அவர்களும் வந்து குருமார் பலருடன் கலந்து சென்னைக்கு வித்துவானவர்களை அனுப்பு வதெனத் தீர்மானித்தனர். அவ்வமயம் அங்கிருந்த சார்ஜென்ட் போதகர் கிருஷ்ண பிள்ளையவர்களைப் பற்றிய வரலாறனைத்தையும் சென்னைக்கு எழுதியனுப்பினர்.

வித்துவான் கிருஷ்ணபிள்ளை இவ்வேற்பாட்டுக்கு இசைந்தார். சிறப்புமிக்க சென்னை மாநகர் சேர்ந்தார். ஆங்கிருந்த குருக்கள் அன்புடன் வரவேற்று ஆதரித்துப் போற்ற, இரண்டொரு மாதங்கள் தங்கியபின் 1858ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் நாளில் மைலாப்பூர் தேவாலயத்தில் ஹென்றி ஆல்பிரடு கிருஷ்ணபிள்ளை என்ற திருநாமத்தில் மறைத்திரு ஜான்கெஸ்ட்டுப் போதகரவர்களால் ஞான நீராட்டுப் பெற்றார். அன்று சவுலாக வாழ்ந்த இத் தமிழறிஞர் பவுலாக மாறினர். ஆண்டவருக்கே நன்றி.

பாளையங்கோட்டை திரும்பினர், மனைவி, மக்கள், தாயார் முதலில் எதிர்த்தனர் உற்றார் உறவினர் முற்றும் வெறுத்தனர். சற்றும் தளரவில்லை நம தமிழ்க்கவியரசர். ஆண்டவர் காட்டிய அன்பு வழியில் நின்று அனைவரையும் தமவழியில் இழுத்து ஆண்டவரின் அடிமைகளாக்கினர். நாற்பதாண்டுகள் கிருஸ்துவராக வாழ்ந்து நல்ல பல தொண்டுகளாற்றி தமது 73வது வயது 1900ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார்.

கிருஸ்து பெருமானின் அன்பை ருசித்துப் பேரின்பம் கண்ட கிருஸ்தவக் கவியரசர் H. A. கிருஷ்ண பிள்ளையவர்கள், இந்த அன்பைப் பிறருக்கும் காட்ட விரும்பினார். கிருஸ்தவர்களை வெறுத்து அவர்கட்குத் துன்பஞ் செய்து ஒருகால் வாழ்ந்து வந்த தன் அறியாச் செயல்களுக்கு ஈடு செய்து தன பாவங்களுக்கு மன்னிப்புத் தேடுவது போல, பிறரையும் இயேசு பெருமான் திருவடிகளுக்குக் கொண்டு வரும் பணியே சிறந்ததெனவும், கழுவாய்க்குரிய செயல் எனவும் எண்ணினார். "உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக மாற்றுவேன்" எனத் திருவாய் மலர்ந்த இயேசு பெருமானின் பொன் மொழிகளைத் தனக்கே சொன்னவைகளாக எண்ணி ஏற்றுக் கொண்டார். ஆகவே எண்ணுகின்ற எண்ணம், பேசுகின்ற சொற்கள், செய்கின்ற செயல்கள் ஆகிய அனைத்திலும் கிருஸ்து பெருமானை மற்றோர்க்குக் காட்டும் வகையில் நன்னெறி கைக்கொண்டு வாழ்ந்து வந்தார்.

"பிறவியிற் பிழைவாத கொடிய வைணவராகப் பிறந்தேன். முப்பதாண்டுகள் உலக மயக்கம் கொண்டு மூடிக் கிடந்த அந்தகாரகமாகிய இருட் பிழம்பில் அடைபட்டுக் கிடந்தேன். பல வகையாக உழன்றேன். கொடிய வினைகளுக்கு ஆளானேன். ஒரு நெறியில் நில்லாமல் தீய உள்ளம் கொண்டு இச்சைகட்கு இடங் கொடுத்தேன். அஞ்ஞானத்தில் மூழ்கி வீணாக நாட்களைச் செலவிட்டேன். நீசனாக உளள என்னையும உன் மலரடிக்கு ஆட்படுத்தினீர். குறைவில்லாத ஆன்மீகப் பெருஞ் செல்வத்தை எனக்கு அளித்தீர். இன்று வரை என்னைக் காதது வருகிறீர். என்றாலும் நான் அற்ப அறிவுள்ளவன், நன்றியறியாத பாவி, இத்தகைய கெட்ட குணமாகிய குற்றம் என்னை விட்டு இன்னும் ஒழியவில்லை. இறைவனின் வலது பாகத்தில் இருந்து கொண்டு அடியவர்களுக்காக இரங்கி என்றென்றும் மன்றாடிக் கொண்டுள்ள மேகம் போன்றவனே! ஏக நாயக

N64

னே! சருவலோக நாயகனே! கிருஸ்து இயேசு நாயக சுவாமியே'' என மனம் உருகிப் பாடி தன் வாழ்வின் முற்பகுதியைக் காட்டியுள்ளார் கவியரசரின் இளமை வாழ்விலே அவருடைய வலது தோளில் சங்கு முத்திரையும், இடது தோளில் சக்காம் முத்திரையும் பழுக்கக் காய்ச்சப்பட்ட ஐம்பொன் உலோகததினால் சூடு இடப் பெற்று இருந்தன. தன்னை வைணவனெனக் காட்டும் வண்ணம் இவ்வாறு உடம்பில் தழும்பு உண்டாக்கிக் கொள்ளுதல் வைணவரின் வழக்கம். ஆகையால் தான் முன்பு தழுவியிருந்த வைணவ மதத்தின் மீது வெறுப்புக் கொண்டவராய் ''பிடிவாத கொடிய வைணவம்'' எனப் பாடினார்.

இந்துவாக இருந்து கிருஸ்தவரானவர்கள் ஏராளமான பேர் உண்டு. எனினும் வைணவ சித்தாந்த நூல்களையும, திருவாய்மொழி நாலாயிரதிவ்ய பிரபந்தம், கம்பராமாயணம் போன்ற பெரு நூல்களையும் படித்தோர் காண்பது அரிது. இந் நூல்களைத் தெளிவாகக் கற்றுணர்ந்த நம் கவியரசர், கிருஸ்து பெருமானையும் அவரது அன்பையும் சுவைத்துப் பார்த்த பின்னர் முன்னையவற்றைப் பற்றிய கருத்துக்களை வெறுத்தார். இயேசு கிருஸ்து பெருமானை அறியாது வாழ்ந்த காலத்தை 'அந்தகாரப்பிழம்பு' எனக்காட்டி அதில் அடைபட்டுக் கிடந்ததாகப் பாடியுள்ளார்.

பிற கிருஸ்துவ மக்களுக்குத் தான், முன்னர் செய்த கொடுமைச் செயல்களை எண்ணியே ''மறவினைக்கு ஆளாகி, நெறிகிலாத்தூர்த்தமன வாஞ்சைக்கு இடங் கொடுத்து'' எனவும் பாடியுள்ளார். இத்தகைய பாவியாகிய தன்னையும் தடுத்து அடிமை கொண்ட இயேசு சுவாமியின் புகழ் பாட விரும்பி ''நீசன் என்னை மலரடிக் காட்படுத்திக் குறைவிலாப் பேரருள் அளித்து'' எனப் பாடியுள்ளார்.

77312

ஆகவே அவர் எழுதியுள்ள பாடல் ஈண்டு கீழே காணலாகும்:—

''பிறவியில் பிடிவாத கொடிய வைணவனுய்ப்
பிறந்து முப்பது வற் சரம்
பிரபஞ்ச மயல் கொண்டு மூடாந்த காரப்
பிழம்பில் அடைபட்டு உழன்று
மறவினைக்கு ஆளாகி நெறிநிலாத் தூர்த்தமன
வாஞ்சைக்கு இடங்கொடுத்து
மருளுற்று வறிது நாள் செலவிட்ட நீசன் எனை
மலரடிக்கு ஆட்படுத்திக்
குறைவிலாப் பேரருள் அளித்து இன்று காறும்
குறிக்கொண்டு காத்தி எனினும்
கொச்சைமதி யேற்கு இன்னும நன்றியறியாக்கெட்ட
குணதோஷம் ஒழியவில்லையே
இறைவலப் புறமிருந்து அடியருக்காப்பரிந்து
என்றும் மன்றுடு மூகிலே
ஏகநாயக சருவலோக நாயக கிருஸ்து
இயேசு நாயகி சுவாமியே''

கிருஸ்து பெருமானை எற்றுக் கொண்ட இவர் பலருடைய பழிச் சொற்களுக்கும, இழுக்கான பேச்சுக்கும் ஆளானுர். இவற்றை யெல்லாம் பொறுமையுடன் சகித்தார். ஆண்டவரின் திருவடிச் சுவடுகளைப் பின்பற்றி அவர்கட்காக ஜெபம் செய்து வந்தார். "பிதாவே இவர்களை மன்னியும். இவர்கள் செய்வது இன்னதென்று அறியாமற் செய்கிருர்களே'' எனப் பிறருக்காக வழிபாடு செய்வதே தன் கருமமெனக் கொண்டு வாழ்ந்தார் அத்துடன் ''யான கண்ட இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற முதுமொழியை மனதிற் கொண்டவராய் பிறரைத் தன் வயப்படுத்தி, இயேசு பெருமானை அவர்கட்கும் காட்டி அவர்களையும் இயேசு கிருஸ்து பெருமானின் அடியவர்களாக்கும் பணியில் இறங்கினர்.

ஹென்றி ஆல்பிரடு கிருஷ்ணபிள்ளை எனப் பெயர் கொண்ட நம் கிருஸ்தவக் கவியரசர் சிவந்த மேனியும், நெடிய உடலும், அழகிய முகமும் கண்டாரைக் கவர்கின்ற கருணைக் கண்களும் கொண்டவர் என முன்பே கண்டோம். எவரிடம் பேசும்பொழுதும் அன்புகனிந்த இன்சொற்களைப் பேசுவார். தம்மிடம் வருவோருக்கு நல்ல அறிவுரைகள், அறவுரைகள் கூறுவதோடு அவர்கள் விரும்பும் வண்ணம் உணவூட்டி அனுப்புவார். அவரது இல்லம் மிகவும் சிறிதாக, ஆனால் அழகுபெற்ற ஒரு ஆசிரமம் போன்று விளங்கியது.

சாயர்புரத்தில் பணியாற்றியகாலையில் ஒருநாள் மாலை நேரம் மிகவும் தொலை தூரத்திலிருந்து ஓர் இளைஞன் இவரிடம் வந்தான். சைவப் பையனாக, திருநீறு அணிந்து, கையில் புத்தகங்கள் ஏந்தியவண்ணம் வந்திருந்தான். பையன் நெட்டையாக வளர்ந்து, கருமை நிற மேனி கொண்டிருந்தான். கவியரசரை யணுகி, "ஐயா இவ்வூரிலிருக்கும் உயர்நிலைப் பள்ளியில் என்னைச் சேர்த்துவிட வேண்டும்" என வேண்டிக்கொண்டான். அண்டினவரை ஆதரிக்கும் பெருங்குணம் படைத்த நம் கவியரசர் இளைஞனுடைய ஊர், இவ்வளவு தொலைவு வரக்காரணம், பிறந்து வளர்ந்த குலம் இவை யாவற்றையும் வினவினர். அவ்விளைஞனோடு பல மணி நேரம் பேசிக்கொண்டேயிருந்தார். எல்லாவித உதவியும் செய்வதாக வாக்களித்தார். பொழுது போனதே தெரியவில்லை. இருட்டிவிட்டது. அப்போது இந்த இளைஞனைப்பற்றி நம் கவியரசர் எண்ணத் தொடங்கிவிட்டார். தக்கதான உணவுக்கடை இல்லாத அந்த ஊரிலே பையனை எவ்வாறு உண்பிப்பது என எண்ணினர். அந்தச் சைவ இளைஞனோ வேறு எவர் வீட்டிலும் உண்ணமாட்டான். வெகுதூரம் நடந்து வந்துள்ள அவனை மேலும் அந்த இரவு முழுவதும் பட்டினி போட மனமில்லை. இந்நேரத்தில் கவியரசரவர்களுக்கு ஒரு யோசனை உதித்தது. அருகிலிருந்த கிணற்றண்டை அழைத்துச் சென்று உணவையே சமைத்து விடுமாறு செய்வதெனத் துணிந்தார். அரிசி,

பருப்பு, காய்கறி முதலியவற்றையும், உணவு ஆக்கும் கலங்களையும் தானே எடுத்து வந்தார். அச்சைவ இளைஞனுக்குச் சமையல் செய்யவேண்டிய விதத்தையும் உடனிருந்து கற்பித்தார். இடையிடையே தட்டுமுட்டுச் சாமான்கள் தேவையானவற்றைத் தாமே தம் வீட்டினின்று எடுத்து வந்தார். அக்கிணறு மூழியண்ணன் கிணறு என வழங்கப் பெற்று வந்தது. அந்த இடத்திலே தான் இந்த அன்புச் செயல் நடைபெற்றது. உணவு சமைக்கப்பெற்றது. இளைஞர் நன்கு உண்டார். கவியரசர் இல்லத்தில் இளைஞர் உறங்கினார்.

அந்த இளைஞரின் உள்ளத்திலே கவியரசர் காட்டிய அன்பும் கருணையும் ஆழ்ந்து பதிந்துவிட்டது. சைவனாக இருக்கும் எனக்கு இவ்வளவு பெரிய தன்மை வாய்ந்தவரும், மகா வித்துவானுமாக இருக்கும் இவர் எனக்கு, தானே பல பொருட்களை எடுத்து வந்து செய்த உதவி எவ்வளவு பெரிது. அவர் பற்றிக்கொண்டிருக்கும் சமய உணர்ச்சியாலல்லவோ இவ்வாறு பிறரிடம் அன்பு காட்டுவதும் தாழ்மை, பரிவு, ஈகை முதலியன கொண்டு வாழ்வு நடத்துவதும் காணப்பெறுகிறது என எண்ணலானார். மேலும் கவியரசரின் செயல்கள், உரையாடல்கள், அறிவுரைகள் ஆகியன இந்த இளைஞரைக் கவர்ந்தது. சாயர்புரம் பள்ளியிலே சேர்க்கப்பட்டுக் கல்வி பயின்ற இந்த இளைஞர் இறுதியிலே இயேசுகிறிஸ்து பெருமானை ஏற்றுக் கொண்டார். இந்த இளைஞரே திவான் பகதூர் A. S. அப்பாசாமி பிள்ளை என்ற வழக்குரைஞராவார். இந்த அப்பாசாமி பிள்ளையவர்களின் திருக்குமாரரே கோயமுத்தூர் அத்தியட்சரான அருள்பெருந்திரு A. J. அப்பாசாமி ஐயரவர்களாவார்.

பாளையங்கோட்டைக் கல்லூரியிலே தமிழ்ப் பணியாற்றும் வாய்ப்பு நம் கவியரசருக்குக் கிட்டியது. ஆங்குப் பணியாற்றிய இவர் தம்பால் பயிலும் மாணவரிடையே செல்வாக்கு மிகுந்த தமிழ்ப் பேராசிரியராக விளங்கினார்.

சங்க இலக்கியங்களையும் கம்பராமாயணம் போன்ற பெருங்காப்பியங்களையும் கவியரசர் கற்பிக்கும் திறன் தனிச்சிறப்புடையது ஆகும். ஆகவே மாணவரின் நன் மதிப்புக்கு ஆளானார். ஆனால் சமயம் பற்றிய விளக்கங்கள் வருகின்ற காலையில் கிருஸ்து சமயக்கருத்துக்களை மிகத் தெளிவாக விளக்கிவருவார். எனவே மாணவரிடை ஓர் ஐயம் பிறந்தது. இந்து சமய நூல்களையும் பிறபெருநூல் களையும் நன்குகற்றுணர்ந்த மேதையான இவர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியது ஏன் என்பதே அந்த ஐயம்.

கவியரசரைச் சொற்பொழிவாற்றும் படியாகப் பலர் கேட்பதுண்டு. அவருள் ஒருவர் கதிர்வேல் நாயனார் ஆவார். மறுபிறப்பு, என்னும் பொருள் குறித்து, பதினேழு சொற்பொழிவுகள் செய்துள்ளார் நம் கவியரசர். எனவே அவற்றைக் கூர்ந்து கவனித்து வந்த பல மாணவர் தாங்கள் கைக்கொண்டு வரும் குல உயர்வு தாழ்வு, விக்கிரக ஆராதனை, பெண்ணடிமை, புராண நம்பிக்கை முதலியன வற்றை வெறுத்து உண்மைநெறியினை உணர்ந்து விட்டனர். தனிப்படப் பலமாணவருடன் அடிக்கடி உரையாடி அவர்களின் ஐயங்களைப் போக்கியும் வந்துள்ளார். ஆகவே பிற்காலத்தில் தாசில்தார் அலுவல் பார்த்த கதிர்வேல் நாயனார் நம் கவியரசர் பேச்சுக்களின் பயனாக தாமஸ் கதிர்வேல் நாயனாராக மாறி இறுதிவரை இயேசுபெரு மானைப் பற்றி வாழ்ந்தார்.

இவ்வாறாக பாவவழிவிடுத்து ஜீவவழி சேருமாறு பலரைக் கிருஸ்து பெருமான் திருவடி நிழலுக்குக் கொணர்ந்தார். மனிதரைப் பிடிக்கிறவராக வாழ்வு நடத் திய கவியரசர் H. A. கிருஷ்ணபிள்ளையவர்கள் மூலம் அடியிற் காணப்படும் பேரறிஞர்கள் கிருஸ்தவரானார்கள்.

1. திவான்பகதூர் ஏ. எஸ். அப்பாசாமி பிள்ளை
2. தாசில்தார் தாமஸ் கதிர்வேல் நாயனார்
3. திரு இ. ராஜப் பிள்ளை

4. ,, சண்முகசுந்தரம் பிள்ளை
5. ,, புன்னைவனம் பிள்ளை
6. ,, வரதராஜ பிள்ளை
7. ,, பொன்னப்ப பிள்ளை
8. ,, கிருஷ்ணய்யர்

பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிருஸ்து பெருமானின் அடியவரான இக்குடும்பத்தினரின் சந்ததியார் இன்றுவரை பல இடங்களில் கிருஸ்துவின் உண்மைத் தொண்டர்களாக வாழ்கின்றனர்.

மேலும் முருகன் குருச்சியிலிருந்த பல மறவர் குடும்பங்களும் கவியரசர் H. A. கிருஷ்ணபிள்ளையவர்களின் நன்முயற்சியால் கிருஸ்தவர்களாயின. ஆனல் எவரும் வற்புறுத்தல் மூலமோ, பணஉதவி படிப்பு முதலியன எதிர் பார்த்தோ, பிற உதவி பெறவோ ஆண்டவரைப் பற்றிக் கொள்ளவில்லை. இயேசு கிருஸ்து பெருமானின் பாவ நீக்குந்தன்மையும், இரட்சிப்பு அருளும் மேன்மையும் மனதிற்கொண்டே நல்ல படிப்பாளிகளாயிருந்தோரும் கூட கிருஸ்தவராயினர்.

டோனுவூர் கார்மைக்கேல் அம்மையார் கவியரசர் வித்துவான் H. A. கிருஷ்ணபிள்ளையவர்களின் இறுதி வேளையைப் பற்றி எழுதிய குறிப்பு:—

"வித்துவானவர்களை நான் மறுபடியும் கண்டேன். அக்காலை அவர் சாகுந்தறுவாயில் இருந்தார். சுயநினைவு அற்றவர் போலக் காணப்பட்டார். அருகிலிருந்தவர்கள் அவர் என்னை அறியமாட்டாரென்றும், வாசிக்கக் கூடாத நிலைமையில் இருக்கிறரென்றும் கூறினர். நானே "இயேசு" என்னும் சொல்லை தமிழ் மொழியில் பெரிதாக எழுதிக் கொண்டு போயிருந்தேன். அதை அவர் முகத்திற்கெதிரே காண்பித்தேன். கண்களைத் திறந்து அதைப் பார்த்தார்.

அவர் முகத்தில் ஒளி வீசியது. அன்பு நிறைந்த கண்களோடு புன் முறுவல் பூத்து அச்சொல்லைப் பார்த்துக் கொண்டிருந்தார் அம்முக அழகையும் புன் முறுவலையும் நான் ஒருக்காலும் மறக்க இயலாது. அவர் அருகிலிருந்த ஒருவர் அவரது கையைத் தூக்கினார். அவரது விரல் இயேசு என்ற சொல்லை நடுக்கத்துடனே எழுதிக்கொண்டிருந்தது. கண்கள் மீண்டும் ஒளிவீசின. அவர் இயேசு பெருமானுடன் பேசினார் எனக் காணப்பட்டது. பின்னர் குழந்தை தன் தாய் மடியில் அடைக்கலம் புகுவது போல ஒரு பக்கமாய்த் திரும்பிக கண்களை மூடினார் இயேசு பெருமானாகிய தாயின் அடைக்கலத்துக்குள்ளானார். அவ்விரல்களோ இயேசு என்ற அச்சொல்லைத் தொட்ட வண்ணமே இருந்தது''.

1900 ஆம் ஆண்டு பெப்ருவரித் திங்கள் 3 ஆம் நாளில் மறைந்தார். அவரது நல்லுடல் பாளையங்கோட்டை சி. எம். எஸ். கல்லறையில் எல்லாவித கிருஸ்தவ மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பெற்றது. அவர் புகழ் நம்மிடை இன்றும நிலவுகிறது.

இரட்சணிய யாத்திரிகம்: தமிழ் நாட்டுக் கிருஸ்துவர்கள் இதுவரை கண்டறியாத ஒரு பெருநூலை நம் கவியரசர் எழுதியுள்ளார். ஜான்பன்யன் என்னும் பக்தன் ஆங்கிலத்தில் எழுதியுள்ள மோட்சபிரயாணம் (Pilgrims Progress) என்ற நூலைப், பலமொழிகளில் மொழிபெயர்த்துள்ளனர். தமிழ் மொழியிலும் உரை நடையிலேயே அந்நூல் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது. அந்நூலையே எடுத்துக்கொண்டு, பெருங்காப்பியமாக நாலாயிரம் செய்யுட்கள் எழுதி ''இரட்சணிய யாத்திரிகம்'' என்ற பெயரிட்டு அவர் வாழ்ந்த காலத்திலேயே அச்சியற்றிக் கிருஸ்து பெருமான் திருவடிகளில் தமிழ்ப் பாமாலையாகச் சூட்டிச் சென்றுள்ளார். இந்நூலில் கிருஸ்தவ சமயத்தின் பேருண்மைகள், சமய விளக்கங்கள்,

பண்பாடு, மேன்மை, பாவமன்னிப்பு, இரட்சிப்பு, இன்ப வீடு ஆகிய கிருஸ்தவ நெறிகளை விரிவாகக் காணலாம். தேன் சொட்டும் தமிழ் நடையினைக்கையாண்டு, தமிழ் இலக்கணத்திற்கோர் சான்றென மிளிருமாறு நூல் பேரிலக்கிய வகையினில் அமைக்கப் பெற்றுள்ளது.

இந்நூலைப்பார்த்த, ஒருசில கிருஸ்தவர்கள் நம்கவியர சரைக் கிருஸ்தவக் கம்பன் என அழைத்துள்ளனர். இப்படிப் பெயர் இடுவது பொருந்தாதெனவே தோன்று கிறது. கம்பன் காவிய நடையை யொத்த இவரது கவிகளைக் கண்டதும் இவ்வாறு கம்பனின் பெயரை இவருக்குச் சூட்டத்துணிந்தனர். இப்பெயர் சூட்டிய பெரியார்கள், தமிழ் உலகில் இவரது மேன்மையைக் காட்ட வேண்டும் என்னும் நல்லெண்ணமும் ஆவலும் கொண்டே இவ்வாறு பெயரிடத்துணிந்துள்ளனர். கவியளவில்மட்டும் இவர்கள் துணிவு பொருந்துமேயன்றி கருத்தில் ஆயும் போது இப்பெயர் ஏற்றதாகாது. கம்பன்காவியம் காட்டுகின்ற கருத்தோவியத்திற்கும், இரட்சணிய யாத்திரிகம் காட்டுகின்ற கருத்தோவியத்திற்கும் பெரிதும் வேறுபாடுகள் உள. வெறும் கவிநடையைமட்டும் ஆய்ந்து பெயரிடுதலை விடுத்துக் கருத்தை ஆய்ந்து பெயரிடுவோ மெனில் இரட்சணியம் பொதிந்திருக்கும் இந்நூல் செய்த புலவர் பெருமானைக் 'கிருஸ்தவக் கவியரசர்'' என்பதே சாலப் பொருந்தும்.

தமிழில் பயின்ற பல வித்துவான்கள் உளர். அவர்களிற் சிலர் கவிகள் எழுதும் ஆற்றலும் பெற்றுள்ளனர். எனினும் நம் கவியரசரின் கவிதைகளில் உள்ள கருத்தாழம் காணப்படவில்லை. சொற்சுவை, பொருட்சுவை, கருத்தாழம், நடையழகு, கவியொழுக்கு இவற்றை ஆயும் திறன்படைத்தோர் இவரைக் கவியரச ரென்றே கொள்ளுவர். கிருஸ்து பெருமானின் இரட்சிப்பை விளக்கும் இரட்சணியம் என்ற சொல்லைத் தம் நூல்களுக்

கெல்லாம் முதற் சொல்லாகக் கொண்ட இவரை இரட்சணியக் கிருஸ்தவக் கவியரசர் என்றே கொள்ளத் துணிகின்ரேம்.

இரட்சணிய யாத்திரிகம் என்ற இந்நூல் பத்தொன்பதாம் நூற்ருண்டில் செய்யப்பெற்றது. இருபதாம் நூற்ருண்டில் வாழும் தமிழகத்துக்கிருஸ்தவர்கள், "கிருஸ்தவர்கட்கும் இலக்கியம் உண்டு" எனப் பிறசமயப் பெரியார்கள் உணர்ந்து பேசுவதைக் கேட்டுப் பெருமிதம் அடையலாம். அந்நூற்சிறப்பை எழுதப்புகின் அஃதே ஒரு தனி நூலாகிவிடும்.

1

"இரட்சணி யாத்திரிக இலக்கியமே
இரட்சிப்பைக் காட்டிநிற்கும்
மெச்சிடுவர் ஆழ்ந்திடுவர் கிருஸ்துவரின்
பெருநூலாம் இதுவே என்பர்

2

வான்கொடுக்கும் இன்பமதைத் தான்கொடுக்கும்
வளமை செறி ஓவிய மாம்
ஏன் படிக்கப் பலநூல்கள் கிருஸ்தவர்க்கு
இது ஒன்றே சாலுமன்ரே

3

ஹென்ரி ஆல்பிரடு எனும் கிருஸ்துவப் பேர்
கிருஷ்ணபிள்ளை ஏற்ருரன்றே
என்றுமுள தமிழகத்துக் கிருஸ்துவர்கள்
இவர்க்காற்றும் கைம் மாறுண்டோ"

எனக் 'கிருஸ்துவ இசை முழக்கம்' நாம் பாடுவதில் பெருமையடையலாமல்லவா?

இரட்சணிய மனோகரம்: இதுவும் நம் கவியரசர் செய்துள்ள ஒரு நூல். யாத்திரிகத்தில் பல இடங்களில் தேவாரப் பாடல்களாகப் பாடியுள்ளவற்றையும் பிற பாடல்களையும் சேர்த்து வெளியிட்டுள்ள ஒரு நூல் தொகுப்பு. தமிழ்

நாட்டில் பிற சமய அன்பர்கள் பாடுகின்ற வண்ணம் நம் மக்களும் தேவாரம் பாடி இயேசு பெருமானை வழிபட்டு, பக்தி நிலையடையட்டும் எனக் கவியரசர் செய்த ஒரு பக்தி நூல், 'சத்தாய் நிஷ்களமாய்' 'பக்தியாய் ஜெபம் பண்ணவே' 'கண்குளிரக்காணும் நாளே' 'சிலுவை மிசைக் கண்டேனே' 'அடைக்கலம் அருளே' போன்ற பக்திப் பாடல்கள் ஏறத் தாழ ஐந்நூறு வரை இந் நூலில் காணலாம். மேலும் 'சந்நிதி முறை' என்ற தலைப்பில் மூப்பத்து மூன்று பெரும் பாடல்கள் விருத்தப்பா வகையில் பாடியுள்ளார். உள்ளத்தை உருக்கி, மெய் வாய், கண், மூக்கு செவி ஆகிய ஐம் புலன்களையும் தன் வயப்படுத்தி இயேசு பெருமான் திருவடித் தாமரைகளுக்கு இழுத்துச் செல்லும் வகையில் இப் பாடல்கள் அமைந்துள்ளன.

கவியரசர் பாடல்கள் நல்ல செந்தமிழ் நடையில் உள்ளதாலும், பெரும்பாலான கிருஸ்துவர்கள் ஆங்கில மொழி கற்கின்ற அளவுக்குத் தமிழ் நூல்களில் ஆர்வங் காட்டாமையாலும், இப் பாடல்களின் நயம் பற்றிக் கிருஸ் துவ உலகம் இன்னும் நன்கறியவில்லை. பல தமிழ்ப் புலவர்கள் இக் காலையில் இப் பாடல்கட்கு உரையெழுதி வரத் தொடங்கியுள்ளனர். உரையோடு படிக்கும் கிருஸ்து வர் எவரும் இவற்றின் சிறப்பை விரைவில் உணர்வர்.

1

''தேவாரப் பாடல்களே நிறைந்திருக்கும்
தித்திக்கும் நற்றமிழே சிறந்திருக்கும்
நாவாரப்பாடுதற்குப் பாவிருக்கும்
இரட்சணிய மனோகரம் ஒளிர நிற்கும்

2

மனோகரம் பாடி வர மனம் உருகும்
மாண்பு நிறை அறிவு நிலை பண்பு சேரும்
எனோ தரம் இல்லாத நூல்கள் எல்லாம்
இங்குள்ள கிருஸ்துவர்கள் நாடலாமோ

3

நாடோறும் பாடிவரின் ஜெபமேயாகும்
நல்லருளும் பெரும் பேறும் தானே சூழும்
வீடோறும் இரட்சணியம் வளர்ந்து ஓங்கும்
வித்தகனும் கிருஸ்துவினைக் காணலாகும்''

எனக் 'கிருஸ்தவ இசை முழக்கம்' காட்டுவது பொருந்துமல்லவா.

நிறையுரை: இன்று பாரதி விழா, திருவள்ளுவர் விழா, கம்பன் விழா, இளங்கோ விழா எனப் பெரும் புலமை படைத்த புலவர்கட்குத் தமிழ் மக்கள் விழாக்கள் ஏற்படுத்தி அப் புலவர்களின் பாடல் நலங்களை மக்களிடை பரவச் செய்து வருகின்றனர். சமய வேறுபாட்டு உணர்ச்சியாலும் யாத்திரிகம் போன்ற நூற்களில் போதுமான புலமை பெற்றோர் காண்பது அரிதாக இருப்பதாலும் நம கவியரசர் H. A கிருஷ்ணபிள்ளை திருநாள் தமிழ் நாட்டில் தமிழ் மக்களால் இது வரை கொண்டாடப்படவில்லை. படிப்பாளிகள் மிக அதிகம் கொண்ட கிருஸ்துவ சமூகம் இது வரை தமிழ் மொழியை விரும்பிக் கற்று, தமிழ்க் கவிஞர்கள் காட்டியுள்ள பத்தி நிலையை உணர்ந்துகொள்ள வில்லை. இனியாவது விழிப்புணர்ச்சி பெற்று கிருஸ்தவப் புலவர்கள் காட்டியுள்ள பாடல் நயங்களை யுணர்ந்து முன்னேறுவார்களாக.

ஈண்டு ஒன்று குறிப்பிட விரும்புகின்றோம். மேனாட்டி னின்று இங்கு வந்த மிஷனெறித் தந்தையருள் ஒருவர் கர்ன்ஸ்டென்டைன் நோபல் பெஸ்கி என்னும் பெரியார், தம் பெயரை **வீரமாமுனிவர்** எனப் பெயரிட்டுக்கொண்டு, தமிழ் இலக்கிய இலக்கணங்கற்று, தமிழ் மொழியில் அருமையானதொரு செய்யுள் நூல் செய்து **தேம்பாவணி** எனப் பெயரிட்டு தமிழகத்துக் கிருஸ்தவர்களாகிய நம்மிடை விட்டுப் போயுள்ளார். ஆங்கிலமே தாய் மொழியாகக் கொண்ட இவர் தம் நன் முயற்சியால் தமிழில் செய்யுளும்

பாட முடிந்த தென்றால், தமிழகத்துக் கிருஸ்துவர், தமிழ் கடினம் என்றோ, தமிழ்ச் செய்யுள் புரியாதென்றோ சொல்வதை எவரும் ஏற்க மாட்டார். நம்மிடையே போதுமான அளவு முபற்சியில்லை எனவும் ஆங்கிலங்கற்கச் செலவிடும் காலஅளவும் ஒருமுகமனமும் இல்லை யென்றே ஒப்புதல் வேண்டும். காலம் மாறுகிறது என உணரவேண்டும்.

கிருஸ்துவரின் செல்வக் களஞ்சியங்களான இரட்சணிய யாத்திரிகம், மனோகரம், தேம்பாவணி போன்றவை கிருஸ்தவ மக்களிடை பெரிதும் உலாவி, சீரும் சிறப்பும் பெற்று, பக்தி பரவச நிலையை ஊக்கும் நன்னாள் விரைவில் மிளிர எல்லாம வல்ல இயேசு கிருஸ்து பெருமான் தாமே நல்லருள் பொழிவாராக.

EXTRACTS FROM THE FORWARD OF JUSTICE MR. M. DEVADOSS, MADRAS.

The Tamil language has a peculiar charm of its own.

* * *

It is the duty of every Christian who is engaged in evangelistic work to be acquainted with some at least of the didactic poems in the language.

* * *

To neglect one's mother tongue is not only unpatriotic, but is also suicidal.

* * *

Of the several young men of good social position who embraced the Christian faith in the fiftees of the last century, Krishna Pillai, the subject of this work, was the tallest and the handsomest. He was the most talented, erudite and bigoted of all. The very word Christian was hateful to the Hindus in those days. A number of people

of Nallur, Tenkasi Taluq, became Christians in the forties. This was too much for the begoted Vaishnavite boy Krishnan who was about 17 years of age and who had recently succeeded his father in the managership of the village of Tippanampatti near Pavoor, Tenkasi Taluq. Aided by his relations, and local maravars, he raided the village of Nallur, beat and ill-treated the Christians while the maravars plundered their houses.

* * *

Young Krishna Pillai who persecuted the Christians in the forties became the **St. Paul** of the Tamil Church in after years.

* * *

One great characteristic of Mr. Krishna Pillai was his great regard for truth.

* * *

The modern generation knows not the trials, the persecutions, and the temptations of the early band of Christian converts.

* * *

They corrected abuses, did away with superstitious observances, elevated the Chistians socially, morally, intellectually and spiritually and made the name Christian Synonymous with all that is pure and loveable.

* * *

Hindu names were tabooed. These men did not change their names though some of them added Christian names to their own at their baptism. They said "the test is the change of the heart and not the name".

* * *

Even as late as the beginning of the 20th century a good old but narrow minded missionary asked when a child was about to be christened Lakshmi "Is it not

a heathen name?" and the reply was "Did not Mr. Gladstone call his daughter Helen?" The poor missionary had no answer to give. Such were the prejudices which the early converts had to combat and overcome.

* * *

Mr. Krishna Pillai was the means of converting many men to the Christian faith. His life and teaching influenced hundreds of young men who for family or other considerations could not openly make a declaration of their faith.

* * *

About 1878 the then Metropolitan of India (Bishop E. R. Johnson) paid a visit to the Tinnevelly District. A beautiful service was held in the Trinity Church Palamottah and the Metropolitan in the midst of his sermon suddenly turned towards Mr. Krishna Pillai and said "I know you have brought many to the feet of Jesus, may God spare you to bring many more".

* * *

I am sure, the 'Life' of Mr. Krishna Pillai will be welcomed by all who love the Tamil language,

O-JMKPw
N64
77312

20A
3-117

விரைவில் வெளிவரும் பிற நூற்கள்

இரட்சணிய யாத்திரிகத் தேன்

இரட்சணிய மனோகர உரைவிளக்கம்

இரட்சணிய நவநீதப் படல உரை

சுவிசேஷ மார்க்கப் படல உரை

* * * * *

"கிறிஸ்தவ இசை முழக்கம்" படித்தீர்களா?
வாங்கிப் படியுங்கள். விலை 50 ந.பை.

இவை கிடைக்கும் இடம்:

ஞானம் நிலையம்,
சோன்சுபுரம்,
பசுமலை, மதுரை 4.

லினக்ஸ் பிரஸ், பசுமலை—1964.